## முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி... முதல் பக்கத் தொடர்ச்சி

அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத் தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண் டுகள் பொறுப்பு வகித்து, அகில இந் திய அரசியலில் சிறந்த வழிகாட்டி யாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக் கிக்கொண்ட முத்தமிழறிஞர் - தமிழி னத் தலைவர் கலைஞர் அவர்களின் 5வது நினைவுநாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மற்றும் கழகப் பொதுச்செயலாளர் துரை முருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொண்ட "அமைதிப் பேரணி", நேற்று (ஆகஸ்ட் 7. திங் கள்கிழமை) காலை சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளா கத்தில்அமைந்துள்ளமுத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப் பட்டு, காமராஜர் சாலையில் அமைந் துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இந்த அமைதிப் பேரணியில் கழக மாநில அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலை மைக் கழகச் செயலாளர்கள், தலை மைச்செயற்குழு, பொதுக்குழு உறுப் பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்க றிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மருத்துவர் அணி, பொறி யாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச் சூழல் அணி, அயலக அணி ஆகிய அனைத்து அணியினர் ஏராள மானோர் கலந்துகொண்டு முத் தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்தினர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.08.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவாக அவரின் நினனவிடத்தின் அருகே பேனா சின்னம் அமைப்பதற்கான தமிழ்நாடு அரசின் முடிவை எதிர்த்து மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட இரண்டு வழக்குகளிலும் தமிழக அரசின் சார்பாக மாநிலங்களவை உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் அவர்கள் ஆஜராகி வாதாடி வெற்றி பெற்றதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்

# தமிழினத் தலைவர் கலைஞர் 5ஆம் ஆண்டு நினைவுநாள் அமைதி ஊர்வலம்!

## எம்.எஸ்.தரணிவேந்தன் - டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை!

திருவண்ணாமலை, ஆக. 8-

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவுநாள் அமைதி ஊர் வலம் நடைபெற்றது. மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால் தலை மையில் நடைபெற்ற அமைதி ஊர்வலத்தின் முடி வில், முத்தமிழறிஞர் கலை ஞர் திருவுருவச் சிலைக்கு வடக்கு மாவட்டச் செயலா ளர் எம்.எஸ்.தரணிவேந் தன், கழக மருத்துவ அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் மாலை அணிவித்து, மரி யாதை செலுத்தினர்.

தந்தை பெரியார் எண் ணங்களை செயல்படுத்திய செயல்வீரர், பேரறிஞர் அண்ணாவின் இதயத்தை இரவலாகபெற்று ஏழை யின் சிரிப்பில் இறைவனை கண்டவர், தமிழன்னைக்கு செம்மொழி மகுடம் சூட் டிய தவப்புதல்வர், திரா விட இனத்தின் எழுச்சி தலைவர், நவீன தமிழகத் தின் சிற்பி, உலகத் தமிழி னத்தின் விடி வெள்ளி, எளிய மக்களின் நல்வாழ்விற்காக தன் வாழ்நாளெல்லாம் இறுதி வரை களமாடிய இணையற்ற களப்போ ராளி, உடன் பிறப்பே எனும் ஒற்றை சொல்லால் இலட் சிய படையினை கட்டியெ ழுப்பிய திராவிடத்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவுநாள் அமைதி ஊர் வலம் பேரறிஞர் அண்ணா சிலையில் இருந்து 07.08.2023 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு திரு வண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற் றது.

அமைதி ஊர்வலத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால் தலைமை வகித்தார்.

தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப் பினர்கள் ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீத்தாபதி, கே.வி. ராஜ்குமார், ஆர்.வேல்முரு கன், பொன்.முத்து, சட்ட மன்ற உறுப்பினர்கள் மு. பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஓ.ஜோதி மாவட்ட பொரு ளாளர்கள் எஸ்.பன்னீர் செல்வம், டி.ஏ.தட்சணா மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் என்.பாண் டுரங்கன், ப்ரியாவிஜய ரங்கன், க.லோகநாதன், ஜெயராணிரவி, விஜியலட் சுமிரமேஷ், மாநில தொ.மு.ச பேரவை செயலாளர் க. சௌந்தரராஜன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனுவாசன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் பாரதிரா மஜெயம் ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

அண்ணாசிலை அருகிலி ருந்து தொடங்கிய அமைதி ஊர்வலம் பெரியார் சிலை, மத்தலாங்குளத் தெரு, தியா கிகள் நினைவு தூண், மத் திய பேருந்து நிலையம், போளூர் ரோடு வழியாக தலைவர் கலைஞர் சிலையை சென்றடைந்தது.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் சிலைக்கு வடக்கு மாவட்டச் செயலாளர் எம். எஸ்.தரணிவேந்தன், கழக மருத்துவ அணி துணைத்த லைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன் மற்றும் கழக முன் னோடிகள் மாலை அணி வித்து, மரியாதை செலுத்தி னர். பின்னர் பொதுமக்க ளுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில், வடக்கு மாவட்ட நகர செயலாளர் கள் ஏ.சி.மணி, கே.விஸ்வ நாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலா ளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி. அண்ணாமலை, ஆராஞ்சி. ஆறுமுகம், சி.சுந்தரபாண்டி யன், மெய்யூர்.சந்திரன், த. ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசே மன், க.சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராம ஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோக ரன், வடக்கு மாவட்ட ஒன் றிய செயலாளர்கள் அ.சுப் பிரமணியன், பி.மனோ கரன், ஏ.எழில்மாறன், கே. டி.ராமசாமி, என்.டி.மனோ கரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ்.மோகன், து.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி. திராவிடமுருகன், எஸ். ரவிக்குமார், கே.பி.ஆர்.பி. பழனி, எஸ்.பிரபு, சி.ஆர். பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன்,

தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கோ.கண்ணன், அ.தண்டபாணி, க.பிரபாக ரன், டி.கென்னடி, கு.பால சுப்பிரமணி, கா.சு.இளங் கோவன், அன்பரசிராஜ சேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் கள் ஏ.சி.வி.தயாநிதி, ஏ.எம். காசி, எம்.கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர். வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்த குமார், அப்சர்லியாகத் பாஷா,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செய லாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழ கன், எம்.சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முரு கன், வி.வெங்கடேசன், டி.கே.மோகன், கே.கோவர் தனன், வேணிஏழுமலை நக ரமன்ற தலைவர்கள் நிர் மலா வேல்மாறன், எச். ஜலால், ஆ.மோகனவேல், ஒன்றியக்குழுத் தலைவர் கள் கலைவாணிகலைமணி, பூ.அய்யாக் கண்ணு, தமயந் திஏழுமலை, பரிமளாகலை யரசன், சாந்திபெருமாள், ராணிஅர்ச்சுணன், கனி மொழிசுந்தர், பச்சையம் மாள்சீனுவாசன், இந்திரா இளங்கோ, கமலாட்சி இளங்கோவன், என்வி. பாபு, த.ராஜி, திலகவதி ராஜ்குமார் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை கழக செயலாளர்கள் மற் றும் நிர்வாகிகள், உள் ளாட்சி அமைப்பின் பிரதிநி திகள், கழக முன்னோடிகள் மற்றும் உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

மாவட்ட தி.மு.க. சார் பில் அமைதி ஊர்வலத்திற் கான ஏற்பாடுகளை நகரச் செயலாளர் ப.கார்த்திவேல் மாறன் செய்திருந்தார்.

### மருத்துவமனைகள் மற்றும்

# மருத்துவர்களுக்கு எதிரான வன்முறையை தடுக்க வேண்டும்!

## மக்களவையில் தர்மபுரி செந்தில்குமார் மசோதா தாக்கல்!

புதுடெல்லி, ஆக. 8-

தர்மபுரி பாராளுமன்ற உறுப்பினர் செந்தில்குமார் மருத்துவர்கள் மற்றும் மருத் துவமனைகளுக்கு எதிராக ஏற்படும் வன்முறையை தடுக்க வேண்டும் என்ற மசோதாவை தாக்கல் செய்து உரையாற்றினார்.



அதில், சுகாதாரப் பணி யாளர்களுக்கு எதிரான வன்முறைகள் இந்தியாவில் மட்டுமின்றி மேற்கத்திய நாடுகளிலும் காணப்படு கின்றன. இந்திய மருத்துவ சங்கம் நடத்திய ஒரு ஆய் வில், 75% க்கும் அதிகமான மருத்துவர்கள் ஏதோ வொரு வகையான வன் முறையை தினம்தோறும் எதிர்கொண்டு வருகின்ற னர். இது உடல் ரீதியான தாக்குதல் மட்டுமல்லாமல் வார்த்தைகளாலும் கொச் சைப்படுத்தப்படுகின்றனர். மேலும் மருத்துவமனை சொத்துக்களுக்கு சேதம் ஏற் படுகின்றது என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து ஏற்கனவே மருத்துவர்கள் மற்றும் மருத் துவமனைக்கு ஏற்படும் சேதங்களை தடுப்பதற்குத் தேவையான குறிப்பீடுகள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. ஆனால் இதற்கான தண்டனை மற்றும் தண்ட னைகளை அதிகரிப்பதில் அதிக கவனம் செலுத்தப் பட வேண்டும். அது மட்டு மல்லாமல் இது போன்ற வன்முறைகள் ஏற்படும் பொழுது அதற்கு தேவை யான அடிப்படைக் கார ணங்களை ஆய்வு செய்து அதனை நிவர்த்தி செய்யும் வரையில் இதற்கான தீர்வு முழுவ துமாக எட்டப்படாது என்று தெரி வித்தார்.

மருத்து வர்கள் மற் றும் மருத்து வமனை மீது ஏற்படும் தாக்குத லுக்கு முக்கி யமான கார ணம் நீண்ட கால காத்திருப்பு மற்றும் மருத்து வர்கள் நோயாளிகள் மீது போதிய கவனம் செலுத்து வதில்லை என்பதே நோயா ளிகள் மற்றும் அவர்களு டன் வரும் உறவினர்கள் தெரிவிக்கும் முக்கிய அடிப் படை காரணமாகும். மேலும் இந்திய மருத்துவ கவுன்சில் நீண்ட காத்தி ருப்பு காலத்தை மேம்படுத் தும் வகையில் புதிய கல்வி பயிற்சியை அறிமுகப்படுத் தியுள்ளது. எனவே பயிற்சி மேற்கொள்ளும் மருத்துவர் கள் அவர்களது பயிற்சி காலத்தில் இதனை அறிந்து கொள்ள வேண்டும்.

மேலும் அந்தந்த மாவட் டத்தில் உள்ள நாடாளு மன்ற உறுப்பினர்கள் தலை மையில் ஒரு குழு அமைத்து மருத்துவர்களின் பாது காப்பு மற்றும் நோயாளிக ளின் குறைகளை இரண் டையும் ஒரு சேர ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரி வித்தார்.

மேலும் இந்த மசோதா மருத்துவர்கள் மீது ஏற்படும் வன்முறையை தடுப்பது மட்டுமல்லாமல் அவர்கள் பணிபுரியும் இடம் பாது காப்பானதாக அமையும் அது மட்டும் இல்லாமல் மருத்துவமனையில் மருத்து வம் பார்க்க வரும் நோயா ளிகளின் உரிமையும் பாது காக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.


தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

**கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருநெல்வேலி**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.22/2023–2024/வ1/நாள்–04.08.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருநெல்வேலி வட்டம் அவர்களால், **திருநெல்வேலி (நெ), க(ம)ப கோட்டம்** சார்ந்த **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 (2 வேலைகள்) திட்டப்பணிக்கு** இணையவழியில் மட்டுமே **இரு உறை முறையில்** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **30.08.2023–14.00 மணிவரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **14.08.2023 முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4336/ஒப்பந்தப்புள்ளி/2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க(ம)ப வட்டம், திருநெல்வேலி**


"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"


## 'வாட்ஸ் அப்'பில் வரும் செய்தி!




# விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!




விருதுநகர் வடக்கு மாவட்ட கழகக் கூட்டம் 10.08.2023 அன்று வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில், மல்லாங்கிணர், இராஜாமணி திருமண மண்டபத்தில், மாவட்டக் கழக அவைத் தலைவர் வி.தங்கராஜ் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள்/நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்.

கழகத் தலைவர் அவர்களது தலைமையில் நடைபெற உள்ள BLA2 (பாகமுகவர்கள்) கூட்டம் சம்பந்தமாக.

**அமைச்சர் தங்கம்தென்னரசு**
செயலாளர்
விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க.

# எங்கள் முன் வாழ்ந்த வள்ளுவன் கலைஞர்!



வசித்துப் போனவர் மத்தியில்
வாழ்ந்து போனவன் நீ;
எங்களை
வாழ வைத்துப் போனவன் நீ;
"ஆட்சி நடத்த அதிகாரம் எதற்கு?"
என அறிவாலயத்தில் அமர்ந்தபடி
அறிக்கைகளால் காட்டியவன் நீ;
ஆட்சியில் இருந்தோரை உன்
ஆணை முடிக்க
அன்றாடம் விரட்டியவன் நீ!
உன் ஒவ்வொரு பத்தாண்டுக்கும்
புது வில்லன்கள்
வந்தார்கள், போனார்கள்!
ஹீரோ நீ மட்டும் மாறவே இல்லை;
கொஞ்சமும் துவளவே இல்லை!
"துன்பம் வரும் வேளையிலே சிரிங்க,"
என்ற வள்ளுவன்
அதைச் செய்தானோ இல்லையோ,
எங்கள் முன் வாழ்ந்த வள்ளுவன்
நீ செய்தாய்;
பூச்செண்டையும்
அணுகுண்டையும்
ஒன்றாய் ஏற்றாய்;
இல்லறம் ஏற்ற
ஜென் துறவி நீ!
ஆட்சியில் அமர்ந்த
புத்தன் நீ;
குழந்தைகள் சிரிப்பும்
குமரிகள் சிரிப்பும்
எந்த மூலைக்கு?
எங்கள் அகக்கீறல்களை
ஆற்றும் அருமருந்தல்லவா
உன் சிரிப்பு;
உலகில் எத்தனை தலைவர்கள்
வரட்டும் போகட்டும்!
தொண்டர்களைத் தன்னைக்
காதலிக்க வைத்த
தலைவன் நீ மட்டும்தானே!
நீ மட்டும்தானே!



டான் அசோக்